# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத்துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## கோயமுத்தூர் மாவட்டவானிலை சார்ந்தவேளாண் அறிக்கை
## (19.09.2023 முதல் 23.09.2023)

**அறிக்கைஎண் 075/2023** **தேதி.18.09.2023**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

கோயமுத்தூர் மாவட்டத்தின் 15.09.23முதல் 17.09.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 83 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 67 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20-23 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்குதிசைவரை பதிவானது.

### கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவாரவானிலை (15.09.2023 முதல் 17.09.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 23.09.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 15/09 | 16/09 | 17/09 | தேதி | நாள்-1 19/09 | நாள்-2 20/09 | நாள்-3 21/09 | நாள்-4 22/09 | நாள்-5 23/09 |
| 6.2 | 4.2 | 2.6 | மழை (மி.மீ) | 5 | 2 | 3 | 3 | 3 |
| 32 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 31 | 31 | 31 | 30 |
| 23 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 21 | 21 | 21 | 20 |
| 5 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டர்) | 8 | 7 | 7 | 8 | 7 |
| 78 | 82 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 70 | 70 | 70 | 70 |
| 74 | 78 | 67 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 30 | 40 | 40 | 40 |
| 23 | 21 | 20 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 14 | 14 | 14 | 16 | 14 |
| 230 | 200 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (19.09.2023 முதல் 23.09.2023)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14-16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **19-09-2023** | 5.0 | 5.0 | 6.0 | 4.0 | 3.0 | 4.0 | 5.0 | 5.0 | 4.0 | 5.0 | 4.0 | 3.0 |
| **20-09-2023** | 0.0 | 2.0 | 3.0 | 0.0 | 0.0 | 1.0 | 1.0 | 1.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 |
| **21-09-2023** | 2.0 | 2.0 | 3.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 |
| **22-09-2023** | 2.0 | 3.0 | 5.0 | 2.0 | 1.0 | 2.0 | 2.0 | 2.0 | 2.0 | 2.0 | 2.0 | 2.0 |
| **23-09-2023** | 3.0 | 4.0 | 6.0 | 2.0 | 1.0 | 2.0 | 2.0 | 2.0 | 2.0 | 2.0 | 2.0 | 1.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த **5** நாட்களுக்கு மேற்கு மண்டல உட்பகுதிகளில் இலேசான மழையுடன் **10-20** கி.மீ வரையிலும் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.<br>மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்து விதைப்பினை தொடங்கலாம்.<br>ஒரு சில இடங்களில் மேகமூட்டம் மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் நீர் மற்றும் பயிர் சத்துக்கள் உறிஞ்சுவது குறைகாவ காணப்படும். ஆதலால் தழைச் சத்து உரங்களை வேப்பபுண்ணாக்கு அல்லது தார் கலந்து இடவேண்டும். இதனால் சத்துக்கள் உபயோகிப்புத்திறன் அதிகமாக இருக்கும். |
| நெல் | விதைப்பு | நிலவும் சாதகமான வானிலையினைக் கருத்தில் கொண்டு சம்பா நெல் விதைப்பினை தொடரலாம்.<br>காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் நெல்லில் இலை முனை காய்ந்து காணப்படும். எனவே இதற்கு மருந்து தெளிக்கத் தேவையில்லை.<br>நிலவும் வறண்ட வானிலையினை பயன்படுத்தி முதிர்ந்த கார்பருவ நெல்லினை இந்த வாரத்தில் அறுவடை செய்யவும். |
| சோளம் | அறுவடை | இலேசான தூறலே எதிர்பார்க்கபடுவதால் மானாவாரி மற்றும் இறவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை மற்றும் தானியப்பயிர்களை அறுவடை செய்து வெய்யிலில் காயவைத்து |

| | | |
|---|---|---|
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| பருத்தி | பூக்கும் பருவம் | பருத்தியில் செடிகளில் அதிகமான தழை வளர்ச்சியை தடுத்து பூக்களை அதிகப்படுத்த 15 வது இடைக்கணுவுக்கு மேல்உள்ள பகுதியை கிள்ளி விடவும். மேலும் பூ உதிர்வதை தவிர்க்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 மிலி கிராமை 1 லி தண்ணீரில் கரைத்து நடவு செய்த 60 முதல் 90 வது நாளில் தெளிக்கவும் |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 14 - 16 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.<br>மேக மூட்டத்துடன் தூறலும் கலந்து காணப்படுவதால் ஒரு சில இடங்களில் மஞ்சளில் சிக்காடோக்கா இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து நோய் தென்பட்டால் குளோரோதளானில் 2மிலி அல்லது புரோபிக்கோனொஸோல் 2 கி என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| மஞ்சள் | | காற்றின் ஈரப்பதம் மற்றும் வேகம் அதிகமாக உள்ளதால் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் பரவ வாய்ப்புள்ளது. இதைக்கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 1 கிலோ மேங்கோசெப் அல்லது 1.25 கிலோ காப்பர் ஆக்சி குளோரைடு மருந்தினை தெளிக்கவும்.<br>ஒருசில இடங்களில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் மஞ்சளில் இலைப்பேன் தாக்குதல் காணப்படுகிறது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் டைமெத்தையேட் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2மிலி கலந்து தெளிக்கவும். |
| கால்நடை | | கொசுக்களை தடுக்க கால் நடை கொட்டகைகளில் தண்ணீர் தேங்காமல் பாதுகாக்கவும். |

## குறுஞ்செய்தி

- இலேசான தூறலே எதிர்பார்க்கபடுவதால் நிலக்கடலை மற்றும் தானியப்பயிர்களை அறுவடை செய்து வெய்யிலில் காயவைத்து சேமிக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**